நாள்: 27.08.2026
OP 242/2021 JTW 134/2012
பெயர் சுப்பையா
ம.சா.2

<u>**குறுக்கு விசாரணை**</u>

எனக்கு பழனியம்மாளை கடந்த 17 ஆண்டுகளாக தெரியும். அவருக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. பழனியம்மாளை கண்ணனுக்கு 2 வது திருமணம் செய்து அதன் மூலம் 1 பெண்குழந்தை உள்ளது. பழனியம்மாளுக்கும், கண்ணனுக்கும் இடையே என்ன வழக்கு நடந்து வருகிறது என்றால் வரதட்சனை வழக்கு என்று சொன்னார்கள். ஆண்டிபட்டி நடுவர் நீதிமன்றத்தில் என்ன வழக்கு நடைபெற்றது என்றால் கணவர் வேண்டும் என வழக்கு நடைபெற்றது. கண்ணன் விவாகரத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார். எனக்கு இந்த வழக்கை பற்றிய விவரங்கள் முழுமையாக தெரியாது என்றும், பழனியம்மாள் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் எற்னால் சரியல்ல. கண்ணனும் எனக்கு உறவினர் தான்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்